**பெருந்தோட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2015**

---

பெருந்தோட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பு என்பவற்றினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி செயலாளரிற்கும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர்களிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2004 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 1142 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 13.4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பெருந்தோட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிலிருந்து நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் செயற்படாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 3,389,862 தொகை பாதுகாப்பு கட்டணமாக செலுத்தப்பட்டும் ரூபா 107,198 தொகை முகாமைத்துவக் கட்டணமாக வழங்கப்பட்டுமிருந்தன.

(ஆ) இலாப நட்டக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 59,938,149 தொகையான முதலீடுகள் மீதான வட்டி மீள்கொள்வனவு உடன்படிக்கைக்கான சான்றிதழ்களின்மையால் சான்றுதிப்படுத்தப்படமுடியாதிருந்தது.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 82,217,018 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 58,400,083 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 23,816,935 ஆன வீழ்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது. இது மீள்கொள்வனவு உடன்படிக்கை மற்றும் கடன் பத்திரத்திரங்கள் மீதான வட்டி வருமானம் முறையே ரூபா 19,768,498 மற்றும் ரூபா 5,337,730 ஆல் குறைவடைந்திருந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

**3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு**

மீளாய்வாண்டின் போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் பின்வருமாறுள்ளன.

| | ரூபா |
|---|---|
| 2015 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 998,291,631 |
| 2015 செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதிக்கான இலாபம் | 38,805,703 |
| 2015 செப்தெம்பர் 30 இலிருந்து 2015 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான இலாபம் | 2,074,055 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரி | 181,794,533 |
| | ---------------------- |
| திரண்ட நிதியத்திற்கு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாற்றப்பட்ட மீதி | 1,220,965,922 |
| | ========== |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

வெளியக உதவியில்லாமல் நீண்டகால நிலைத்திருக்கும் தன்மைக்காக சிறந்த நிதி நிலைமை வசதியளிப்பதற்கும் இலாபத்தன்மையை முன்னேற்றுவதற்கும் பெருந்தோட்டக் கம்பனிகளில் முதலீடு செய்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிரதான நோக்கமாகவிருந்த போதும் மீளாய்வாண்டு காலப்பகுதியின் போது 23 பயனாளிகளில் 05 பயனாளிகளுக்கு ரூபா 470 மில்லியன் தொகை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

நிதி அமைச்சின் அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் இரண்டு உறுப்பினர்கள் சார்பில் நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிட்டிருந்தனர்.